Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 18/2021** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW**28 |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சரவணன் |
| Father/Husband Name | : | பெரியசாமி |
| Village | : | வாலாந்தரவை |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | கூலிவேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2023

(1ம் எதிரி இறந்துவிட்டார், எதிரிகள் 3 முதல் 6, 8, 10, 12 முதல் 16, 19 வரை ஆஜர், எதிரிகள் 2, 7, 9, 11, 17, 18 ஆஜர் இல்லை. எதிரிகள் 2, 7, 9, 11, 17, 18 சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

முதல் விசாரணை–

நான் தற்போது வாலாந்தரவையில் உள்ள அம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்க்கிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி கிருஷ்ணமூர்த்தி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் என்னுடையது தான். ரொம்ப நாளாகிவிட்டதால் எதற்காக கையொப்பம் செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரி கிருஷ்ணமூர்த்தி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் **அ.சா.ஆ.46.** என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன

எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அத்தாட்சியில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.47**. போலிசார் என்னை விசாரித்தார்கள். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் விசாரணையில் கடந்த 24.06.2018 ம் தேதி காலை 10.30 மணியளவில் நானும், அம்மன் கோவிலை சேர்ந்த மணிமாறன் என்பவரும் எங்கள் ஊரில் இருந்தபோது கேணிக்கரை ஆய்வாளர் அழைத்ததின்பேரில் உடைச்சியார் வலசை சுடுகாட்டு பகுதிக்கு சென்றோம் என்றும் அங்கு இவ்வழக்கின் எதிரியான கிருஷ்ணமூர்த்தி என்பவரை கைது செய்து வைத்திருப்பதாகவும் அவரிடம் எங்கள் முன்பு விசாரித்ததில் எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், மணிமாறன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி கிருஷ்ணமூர்த்தி என்பவர் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை பொட்டையன் வலசையில் உள்ள எதிரியின் வீட்டிற்கு அருகில் உள்ள தென்னந்தோப்பில் உள்ள புளியமரத் தூருக்கு அடியில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியில் நானும், மணிமாறனும் கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக அவரை காப்பாற்றும் நோக்கத்தில் நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 18/2021** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW**27 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பூர்ணவேல் |
| Father/Husband Name | : | மலைச்சாமி |
| Village | : | வாலாந்தரவை |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | கூலிவேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2023

(1ம் எதிரி இறந்துவிட்டார், எதிரிகள் 3 முதல் 6, 8, 10, 12 முதல் 16, 19 வரை ஆஜர், எதிரிகள் 2, 7, 9, 11, 17, 18 ஆஜர் இல்லை. எதிரிகள் 2, 7, 9, 11, 17, 18 சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317ன் கீழ் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

முதல் விசாரணை–

நான் தற்போது வாலாந்தரவையில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்க்கிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி முத்துமாரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. முத்துமாரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.38. என்னிடம் காட்டப்படும் எதிரி பாபுவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. பாபுவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.39. என்னிடம் காட்டப்படும் எதிரி மூவிஸின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன

எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. மூவிஸின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.40. என்னிடம் காட்டப்படும் எதிரி சதீஸ் குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. சதீஸ் குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.41. என்னிடம் காட்டப்படும் எதிரி முத்துமாரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அருவாள் கைப்பற்றப்பட்டதற்காக அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அத்தாட்சியில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.42. என்னிடம் காட்டப்படும் எதிரி பாபு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் TN 65 AF 1020 பஜாஜ் பல்சர் சிவப்பு கலர் பைக் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த அத்தாட்சியில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.43. என்னிடம் காட்டப்படும் எதிரி மூவிஸ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் TN 65 AB 9223 பஜாஜ் பல்சர் கருப்பு கலர் பைக் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த அத்தாட்சியில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.44. என்னிடம் காட்டப்படும் எதிரி சதீஸ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் Yamaha ZR சிகப்பு வெள்ளை கருப்பு கலர் கலந்த பைக் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த அத்தாட்சியில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.45. சுமார் 5 வருடங்களுக்கு முன்னால் கேணிக்கரை காவல் நிலையத்தில் வழக்கில் இறந்துபோன பூமிநாதன் மற்றொருவர் பெயர் தெரியவில்லை அவர்கள் இறந்த வழக்கு சம்மந்தமாக கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன். மற்றபடி இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 29.05.2018 ம் தேதி காலை 06.15 மணியளவில் நானும், வாலாந்தரவை அம்மன் கோவிலை சேர்ந்த பூமிநாதன் என்பவரும் எங்கள் ஊரில் இருந்தபோது கேணிக்கரை காவல் ஆய்வாளர் அழைத்ததின்பேரில் நானும், பூமிநாதனும் வைரவன் கோவில் கூனிஅம்மன் கோவில் அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரிகளான முத்துமாரி, பாபு, மூவிஸ், சதீஸ்குமார், சத்தியமூர்த்தி ஆகியோர்களை கைது செய்து வைத்திருந்ததாகவும் அவர்களிடம் விசாரணை செய்யவேண்டி ஆய்வாளர் எங்கள் முன்பு எதிரிகளிடம் விசாரணை செய்தார். அப்போது எதிரி முத்துமாரி என்பவர் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அதன் பிறகு எதிரி பாபு என்பவர் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அதன் பிறகு எதிரி மூவிஸ் என்பவர் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அதன் பிறகு எதிரி சதீஸ்குமார் என்பவர் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி முத்துமாரி என்பவர் எடுத்து ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை ஏந்தல் பஸ்நிறுத்தத்திற்கு வடக்கே வைத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சியில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் எதிரி பாபு என்பவர் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி பாபு என்பவர் எடுத்து ஆஜர்

செய்த சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 65 AF 1020 என்ற எண் உள்ள இருசக்கர வாகனத்தை ஏந்தல் பஸ்நிறுத்தத்திற்கு அருகே உள்ள டீக்கடை பின்புறம் வைத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சியில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் அதன் பிறகு எதிரி மூவிஸ் என்பவர் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மூவிஸ் என்பவர் வாலாந்தரவையில் உள்ள தனது வீட்டின் அருகில் மறைத்து வைத்திருந்த TN 65 AB 9223 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சியில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் அதன் பிறகு எதிரி சதீஸ்குமார் என்பவர் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சதீஸ்குமார் என்பவர் வாலாந்தரவையில் உள்ள தனது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த Yamaha ZR For Registration இருசக்கர வாகனத்தை ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சியில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியில் நானும், பூமிநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச்சார்ந்தவர்கள் மற்றும் என் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக அவர்களை காப்பாற்றும் நோக்கத்தில் நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 18/2021** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**26 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | முரளி |
| Father/Husband Name | : | பெரியசாமி |
| Village | : | வாலாந்தரவை |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | கூலிவேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2023

(1ம் எதிரி இறந்துவிட்டார், எதிரிகள் 3 முதல் 6, 8, 10, 12 முதல் 16, 19 வரை ஆஜர், எதிரிகள் 2, 7, 9, 11, 17, 18 ஆஜர் இல்லை. எதிரிகள் 2, 7, 9, 11, 17, 18 சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

முதல் விசாரணை–

நான் தற்போது வாலாந்தரவையில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்க்கிறேன். அ.சா.25 இராமமூர்த்தி எனது மைத்துனர் ஆவார். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** –

போலிஸ் விசாரணையில் கடந்த 20.05.2018 ம் தேதி இரவு 11.30 மணியளவில்

நானும், எங்கள் ஊரை சேர்ந்த இராமமூர்த்தி என்பவரும் உச்சிப்புளியில் சாப்பிட்டுவிட்டு நாகாச்சியில் படுக்க வந்தோம் என்றும் அப்போது எங்கள் ஊரைச்சேர்ந்த எதிரி கார்த்திக், பீஸ்குட்டி முனியசாமி, அருண் பிரகாஷ் மற்றும் டிரைவர் ஆகியோர்கள் ஒரு Swift காரிலிருந்து சசிக்குமார் வீட்டிற்கு முன்னால் இறங்கி நின்று கொண்டிருந்தார்கள் என்றும் அவர்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அதன் பிறகு அவர்கள் அனைவரும் அதேகாரில் ஏறி இராமேஸ்வரம் ரோட்டிற்கு போனார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 18/2021** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW**25 |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | இராமமூர்த்தி |
| Father/Husband Name | : | முனியசாமி |
| Village | : | வாலாந்தரவை |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | கூலிவேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2023

(1ம் எதிரி இறந்துவிட்டார், எதிரிகள் 3 முதல் 6, 8, 10, 12 முதல் 16, 19 வரை ஆஜர், எதிரிகள் 2, 7, 9, 11, 17, 18 ஆஜர் இல்லை. எதிரிகள் 2, 7, 9, 11, 17, 18 சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

முதல் விசாரணை–

நான் தற்போது வாலாந்தரவையில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்க்கிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** –

போலிஸ் விசாரணையில் கடந்த 20.05.2018 ம் தேதி இரவு 11.30 மணியளவில்

நானும், எங்கள் ஊரை சேர்ந்த முரளி என்பவரும் உச்சிப்புளியில் சாப்பிட்டுவிட்டு நாகாச்சியில் படுக்க வந்தோம் என்றும் அப்போது எங்கள் ஊரைச்சேர்ந்த எதிரி கார்த்திக், பீஸ்குட்டி முனியசாமி, அருண் பிரகாஷ் மற்றும் டிரைவர் ஆகியோர்கள் ஒரு Swift காரிலிருந்து சசிக்குமார் வீட்டிற்கு முன்னால் இறங்கி நின்று கொண்டிருந்தார்கள் என்றும் அவர்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அதன் பிறகு அவர்கள் அனைவரும் அதேகாரில் ஏறி இராமேஸ்வரம் ரோட்டிற்கு போனார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

சாட்சியின் கையொப்பம்

என்னால் தட்டெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டெழுத்து செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.